முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 780**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.11.2021, புதன்கிழமை

1. அறமெனும் சக்தியாய் வாழும் அரங்கா
அன்னதான சேவையின் மகா சூட்சுமமாக
வரம்பெற்று உலகில் தர்மம் தழைக்க
வல்லமைபட அருளும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன்
ஞான அறிவுரை ஆசி
வரங்களாக உன் தர்மசக்தி
வையகத்தை வலம் வந்து காத்துவர
3. வருகவே உன் தொண்டர்படைகள் மூலமே
வையகம் ஞான யுகமாற்றம் அடையக்கூடும்
பெருமைபட அரங்கன் நீ தரும் தர்மமே
பேரிடரையே மக்களுக்கு வென்று காத்தருள் புரியும்
4. அருள்புரியும் அரங்கன் ஞான உபதேசம்
அகிலத்தை ஞான ஆட்சிக்கு கொண்டுசெல்லும்
பொருள்பட அரங்கன் உன் அவதாரத்தை பூவுலகில் உணர்ந்த மக்கள் மூலமே
அருளுலகம் படைத்து ஆறுமுகன் யான் ஆக்கமுற இந்த உலகத்தில் மாற்றம் செய்வேன்
5. செய்யவே அரங்கனே கலியின் சிறந்த தவசி
சிறப்பறிவு ஊட்டும் மாயோகி ஐயமற அரங்கன் அருளாசி பெற்றுவிட்டால்
அகிலத்தார்க்கு மரணமிடர் துன்பமில்லை
அழியாமை எனும் மகா சக்தியும் உண்டாகி
6. ஆகியே உலகோர்க்கு ஞான பலமும்
அரங்கன்வழி ஞான ஆட்சி அமைய உண்டான வரமும் அருளும் சித்தியும் உறுதியாகும்
வல்லமைபட இந்த மாற்றத்தை அரங்கனைக் கொண்டே ஆறுமுகன் யான்
வையகத்தில் செய்து மகிழ்விப்பேன்
7. மகிழ்வுற அரங்கன் வழி வாரீர்
மன அமைதிகொண்டு ஞானவானாய் வாழ
அகிலத்தில் பிரணவக்குடிலெனும் ஞான சபையை
அடைந்து உலகோர் தேற்றம் பெற வாரீர்வாரீர் அரங்கன் நிழல்நோக்கி
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–